# PAPER-II
# TAMIL

**Signature and Name of Invigilator**

1. (Signature) ____________________________
   (Name) ____________________________
2. (Signature) ____________________________
   (Name) ____________________________

OMR Sheet No. : .............................................
(To be filled by the Candidate)

Roll No. | | | | | | | | |
(In figures as per admission card)

Roll No.________________________________
(In words)

| D | 2 | 6 | 1 | 3 |
|---|---|---|---|---|

Time : **1 $^1/_4$** hours] [Maximum Marks : **100**

Number of Pages in this Booklet : **12** Number of Questions in this Booklet : **50**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of fifty multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (A), (B), (C) and (D). You have to darken the circle as indicated below on the correct response against each item.
   **Example :** (A) (B) ● (D)
   where (C) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **OMR Sheet given inside the Paper I Booklet only.** If you mark at any place other than in the circle in the OMR Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your Name, Roll Number, Phone Number or put any mark on any part of the OMR Sheet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, or use abusive language or employ any other unfair means such as change of response by scratching or using white fluid, you will render yourself liable to disqualification.
9. You have to return the test question booklet and Original OMR Sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall. You are, however, allowed to carry duplicate copy of OMR Sheet on conclusion of examination.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is no negative marks for incorrect answers.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. इस पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए ।
2. इस प्रश्न-पत्र में पचास बहुविकल्पीय प्रश्न हैं ।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी । पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे, जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए उसके कवर पेज पर लगी कागज की सील को फाड़ लें । खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें ।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं । दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात् किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें । इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे । उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा ।**
   (iii) इस जाँच के बाद OMR पत्रक की क्रम संख्या इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें ।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (A), (B), (C) तथा (D) दिये गये हैं । आपको सही उत्तर के वृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है ।
   **उदाहरण** : (A) (B) ● (D)
   जबकि (C) सही उत्तर है ।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पत्र I के अन्दर दिये गये OMR पत्रक पर ही** अंकित करने हैं । यदि आप OMR पत्रक पर दिये गये वृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिह्नांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा ।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें ।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें ।
8. यदि आप OMR पत्रक पर नियत स्थान के अलावा अपना नाम, रोल नम्बर, फोन नम्बर या कोई भी ऐसा चिह्न जिससे आपकी पहचान हो सके, अंकित करते हैं अथवा अभद्र भाषा का प्रयोग करते हैं, या कोई अन्य अनुचित साधन का प्रयोग करते हैं, जैसे कि अंकित किये गये उत्तर को मिटाना या सफेद स्याही से बदलना तो परीक्षा के लिये अयोग्य घोषित किये जा सकते हैं ।
9. आपको परीक्षा समाप्त होने पर प्रश्न-पुस्तिका एवं मूल OMR पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें । हालांकि आप परीक्षा समाप्ति पर OMR पत्रक की डुप्लीकेट प्रति अपने साथ ले जा सकते हैं ।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पेन का ही इस्तेमाल करें ।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है ।**
12. **गलत उत्तरों के लिए कोई नकारात्मक अंक नहीं हैं ।**

**TAMIL**
தமிழ்

**Paper-II**
தாள்-II

**Note** : This paper contains **fifty (50)** multiple choice questions, each question carrying Two (2) marks. Attempt all the questions (50 × 2 = 100).

குறிப்பு : இந்த வினாத்தாள் ஐம்பது (50) விடை தெரி வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவுக்கும் உரிய மதிப்பெண்கள் (2)இரண்டு. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

(50 × 2 = 100).

**1.** எயினர்

(A) மருதநில மக்கள் (B) முல்லைநில மக்கள்

(C) பாலைநில மக்கள் (D) குறிஞ்சிநில மக்கள்

**2.** 'மண்ணாங்கட்டி' என்பதில் இடம்பெறும் "ஆம்"

(A) பகுதிப்பொருள் விகுதி (B) சாரியை

(C) ஆக்கப்பெயர் விகுதி (D) பெயராக்கி

**3.** 'செல்வத்துப் பயனே ஈதல்' எனும் பாடலடி இடம் பெற்ற நூல்

(A) குறுந்தொகை (B) ஐங்குறு நூறு

(C) நற்றிணை (D) புறநானூறு

**4.** முதுமொழிக் காஞ்சியின் ஆசிரியர்

(A) நல்லாதனார் (B) கூடலூரர் கிழார்

(C) கணிமேதாவியார் (D) காரியாசான்

**5.** மணிமேகலையில் இடம் பெற்ற காதைகள்

(A) 28 (B) 26

(C) 24 (D) 30

**6.** திருநாவுக்கரசரை 'அப்பர்' எனப் பாராட்டியவர்

(A) சுந்தரர் (B) மாணிக்கவாசகர்

(C) சம்பந்தர் (D) அப்பூதியடிகள்

**7.** 'பக்தி காரர்' என அழைக்கப்பட்ட ஆழ்வார்

(A) திருமழிசையாழ்வார் (B) பெரியாழ்வார்

(C) பூதத்தாழ்வார் (D) பேயாழ்வார்

**8.** 'திருச்சதகம்' பாடியவர்

(A) படிக்காசுப் புலவர் (B) கம்பர்

(C) திருத்தக்க தேவர் (D) மாணிக்கவாசகர்

9. ‘உண்டு’ என்பது

(I) ஐம்பாலுக்கும் உரியது

(II) மூவிடத்திற்கும் உரியது

(III) குறிப்பு வினைமுற்றாக வருவது

(IV) வியங்கோள் பொருளில் வருவது

இவற்றுள்

(A) I,II,III சரி (B) II,III,IV சரி

(C) I,III,IV சரி (D) I,II,IV சரி

10. ‘அவநுதி அணி’ என்பது

I காலத்தின் கண் - இயல்பாய் உள்ள தன்மையை மறுத்து விட்டு வேறொரு தன்மையை ஏற்றிச் சொல்வது

II சிறப்பின் கண் - இயல்பாய் உள்ள தன்மையை மறுத்து விட்டு வேறொரு தன்மையை ஏற்றிச் சொல்வது

III பொருளின் கண்- இயல்பாய் உள்ள தன்மையை மறுத்து விட்டு வேறொரு தன்மையை ஏற்றிச் சொல்வது

IV குணத்தின் கண் - இயல்பாய் உள்ள தன்மையை மறுத்து விட்டு வேறொரு தன்மையை ஏற்றிச் சொல்வது

இவற்றுள்

(A) I,II,III சரி (B) I, III, IV சரி

(C) I, II, IV சரி (D) II, III, IV சரி

11. தமிழக நில அளவைகள்

I குழி II காடி

III வேலி IV பதக்கு

இவற்றுள்

(A) I,II சரி (B) I, III சரி

(C) I, IV சரி (D) II, IV சரி

12. பொதினி

I சித்தன் வாழ்வு எனும் பெயருடையது

II தண்டபாணி சுவாமி திருக்கோவில் உடையது

III சித்தர் பலருடன் தொடர்பு கொண்டது

IV சேரன் செங்குட்டுவனால் சிறப்பிக்கப்பட்டது

இவற்றுள்

(A) I,II,III சரி (B) I, III ,IV சரி

(C) II, III, IV சரி (D) I, II, IV சரி

**13.** சித்தர்கள்

I அட்டமா சித்தி கைவரப் பெற்றவர்கள்

II உருவ வழிபாட்டை ஏற்காதவர்கள்

III குறியீட்டு மொழியில் பாடியவர்கள்

IV இருண்மைப் பண்புடன் பாடியவர்கள்

இவற்றுள்

(A) அனைத்தும் தவறு (B) அனைத்தும் சரி

(C) I, II, III சரி (D) II, III, IV சரி

**14.** நீலகேசி

I குண்டலகேசியின் எதிர்நூல்

II ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று

III நீலகேசித் தெருட்டு எனவும் அழைக்கப்படும்

IV தோலாமொழித் தேவரால் இயற்றப்பட்டது

இவற்றுள்

(A) I,II,III சரி (B) I, III ,IV சரி

(C) II, III, IV சரி (D) I, II, IV சரி

**15.** நிகண்டு என்பது

I சொற்பொருள் கூறும் நூல்

II மனப்பாடம் செய்வதற்குரிய நூல்

III செய்யுள் வடிவிலானது

IV அகராதியைப் போன்று அகரவரிசையைக் கொண்டது

இவற்றுள்

(A) I,II,IV சரி (B) II, III ,IV சரி

(C) I, III, IV சரி (D) I, II, III சரி

**16.** திருவருட்பா

I ஆறுதிருமுறைகளைக் கொண்டது

II இராமலிங்க அடிகளால் இயற்றப்பட்டது

III எதிர்நூல் பலகண்டது

IV ஆறுமுகநாவலரால் புகழப்பட்டது

இவற்றுள்

(A) அனைத்தும் சரி (B) I, II ,III சரி

(C) I, III, IV சரி (D) I, II, IV சரி

**17.** <u>உறுதிக்கூற்று:</u> (உ) ‘அ’ என்பது அகரம் எனவும் வழங்கும்

<u>காரணம்:</u> (கா) ‘கரம்’ என்பது எழுத்துச் சாரியை

(A) (உ). (கா). ; இரண்டும் சரி (B) (உ). : சரி: (கா). சரியன்று

(C) (உ). சரியன்று ; (கா). சரி (D) (உ). (கா).இரண்டும் சரியல்ல

**18.** <u>உறுதிக்கூற்று:</u> (உ) வஞ்சிநெடும் பாட்டு என்பது பட்டினப்பாலையின் வேறு பெயர்

<u>காரணம்:</u> (கா) முன்னிலைக் கூற்றாக வஞ்சியை விளித்துப் பாடிய நீண்ட பாடல்

(A) (உ). சரி : (கா). சரியன்று (B) (உ). (கா). இரண்டும் சரி

(C) (உ). சரியன்று ; (கா). சரி (D) (உ). கா. இரண்டும் சரியல்ல

19. உறுதிக்கூற்று: (உ) நாலடியார் என்பது ஒரு நீதிநூல்
காரணம்: (கா) நான்கடிகள் கொண்ட வெண்பாக்களால் ஆனது
(A) (உ). (கா). இரண்டும் சரியல்ல (B) (உ). (கா). இரண்டும் சரி
(C) (உ). சரி ; (கா). சரியன்று (D) (உ). சரியன்று ; (கா). சரி

20. உறுதிக்கூற்று: (உ) சைன, பௌத்தத் துறவிகள் தங்கியிருந்த மடங்கள் பள்ளிகள் எனப்பட்டன
காரணம்: (கா) சமயத் தொண்டு, கல்வித் தொண்டு இரண்டையும் சேர்த்தே செய்து வந்தனர்
(A) (உ). (கா). இரண்டும் சரி (B) (உ). சரி ; (கா). சரியன்று
(C) (உ). சரியன்று ; (கா). சரி (D) (உ). (கா).இரண்டும் சரியல்ல

21. உறுதிக்கூற்று: (உ) கோவை என்பது ஓர் இலக்கிய வகை
காரணம்: (கா) காதல் பொருள் பற்றிய செய்யுள்களைப் பொருண்மைபடக் கோத்த இலக்கியம்
(A) (உ). (கா). இரண்டும் சரியல்ல (B) (உ). (கா). இரண்டும் சரி
(C) (உ). சரி ; (கா).சரியன்று (D) (உ). சரியன்று; (கா). சரி

22. உறுதிக்கூற்று: (உ) இளம்பூரணரை உரையாசிரியர் என்றே அழைப்பர்
காரணம்: (கா) தொல்காப்பியம் முழுமைக்கும் முதன்முதல் உரை எழுதியவர் இளம்பூரணர்
(A) (உ). சரி ; (கா). சரியன்று (B) (உ).சரியன்று ; (கா). சரி
(C) (உ). (கா). இரண்டும் சரி (D) (உ).(கா).இரண்டும் சரியல்ல

23. உறுதிக்கூற்று: (உ) சா.கணேசன் அவர்கள் கம்பன் அடிப்பொடி என அழைக்கப்பட்டார்
காரணம்: (கா) கம்பராமாயணம் மீது அவர் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்
(A) (உ). (கா). இரண்டும் சரி (B) (உ). சரி ; (கா). சரியன்று
(C) (உ).சரியன்று ; (கா). சரி (D) (உ). (கா).இரண்டும் சரியல்ல

24. உறுதிக்கூற்று: (உ) இன்றைய ஊடகங்களுள் இணையத்திற்குத் தனியிடம் உண்டு
காரணம்: (கா) உலகளாவிய கருத்துப் பரிமாற்றத்திற்கு நிலைக்களனாக அமைந்துள்ளது
(A) (உ). (கா). இரண்டும் சரியல்ல (B) (உ). (கா). இரண்டும் சரி
(C) (உ). சரி. ; (கா). சரியன்று (D) (உ). சரியன்று ; (கா). சரி

25. உறுதிக்கூற்று: (உ) தமிழ்நாட்டின் மாப்பசான் எனப் புதுமைப்பித்தன் அழைக்கப்பட்டார்
காரணம்: (கா) மாப்பசான் ரஷ்ய மொழியில் சிறந்த கவிதைகள் எழுதிப் புகழ் பெற்றவர்
(A) (உ). சரி ; (கா). சரியன்று (B) (உ). சரியன்று; (கா). சரி
(C) (உ). (கா). இரண்டும் சரி (D) (உ). (கா).இரண்டும் சரியல்ல

**26.** <u>உறுதிக்கூற்று</u>: (உ) நாட்டுப்புறப் பாடல்களில் பாலுணர்வுக் கூறுகள் கூடுதலாக உள்ளன

<u>காரணம்</u>: (கா) நிறைவேறாத ஆசைகளின் வடிகால்களாக அவை அமைகின்றன

(A) (உ). சரி ; (கா). சரியன்று (B) (உ). சரியன்று ; (கா). சரி

(C) (உ). (கா). இரண்டும் சரியல்ல (D) (உ). (கா). இரண்டும் சரி

**27.** <u>உறுதிக்கூற்று</u>: (உ) முதலாம் இராசேந்திரனின் சமையற்காரப் பெண் ஒருத்தி திருவமுதிடும் பெண்டாட்டி என்று கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளாள்

<u>காரணம்</u>: (கா) பெண்டாட்டி என்பது பெண்களைக் குறிக்கும் பொது வழக்காகும்

(A) (உ). சரி ; (கா). சரியன்று (B) (உ). சரியன்று ; (கா). சரி

(C) (உ). (கா). இரண்டும் சரி (D) (உ). (கா).இரண்டும் சரியல்ல

**28.** <u>நிரல்படுத்துக</u>.

சமயங்களின் நான்கு வகை

(A) அகப்புறம்,புறப்புறம்,புறம்,அகம்

(B) அகம்,அகப்புறம்,புறப்புறம்,புறம்

(C) அகம்,புறம்,அகப்புறம்,புறப்புறம்

(D) புறம்,புறப்புறம்,அகம்,அகப்புறம்

**29.** <u>நிரல்படுத்துக</u>.

களவொழுக்கத்தில் நிகழும் புணர்ச்சி வகை

(A) இயற்கைப்புணர்ச்சி,. இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம்

(B) .இடந்தலைப்பாடு, இயற்கைப்புணர்ச்சி, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம்

(C) இயற்கைப்புணர்ச்சி,.பாங்கியிற் கூட்டம், இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம்

(D) பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம், இடந்தலைப்பாடு, இயற்கைப்புணர்ச்சி

**30.** <u>நிரல்படுத்துக</u>.

உபாயம் நான்கு

(A) சாமம், தானம், தண்டம், பேதம்

(B) சாமம், தானம், பேதம், தண்டம்

(C) சாமம், பேதம், தண்டம், தானம்

(D) சாமம், பேதம், தானம், தண்டம்

**31.** <u>நிரல்படுத்துக</u>.

கணக்கு வகை

(A) தொகை, பிரிவு, கழிவு, பெருக்கு

(B) தொகை, கழிவு, பெருக்கு, பிரிவு

(C) தொகை, பிரிவு, பெருக்கு, கழிவு

(D) தொகை, பெருக்கு, பிரிவு, கழிவு

**32.** <u>நிரல்படுத்துக.</u>
அரண் நான்கு
(A) மலை, காடு, கடல், மதில் (B) மலை, கடல், காடு, மதில்
(C) மலை, கடல், மதில், காடு (D) மலை, காடு, மதில், கடல்

**33.** <u>நிரல்படுத்துக.</u>
பொன் வகை
(A) ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்புநதம்
(B) ஆடகம், சாதரூபம், சாம்புநதம், கிளிச்சிறை
(C) கிளிச்சிறை, சாதரூபம், ஆடகம், சாம்புநதம்
(D) கிளிச்சிறை, ஆடகம், சாம்புநதம், சாதரூபம்

**34.** <u>நிரல்படுத்துக.</u>
நூல்வகை நான்கு
(A) முதல்நூல், சார்புநூல், வழிநூல், எதிர்நூல்
(B) முதல்நூல், எதிர்நூல், வழிநூல், சார்புநூல்
(C) முதல்நூல், வழிநூல், சார்புநூல், எதிர்நூல்
(D) முதல்நூல், வழிநூல், எதிர்நூல், சார்புநூல்

**35.** <u>நிரல்படுத்துக.</u>
கரணம் நான்கு
(A) மனம், புத்தி, சித்தம், அகங்காரம்
(B) மனம், புத்தி, அகங்காரம், சித்தம்
(C) மனம், சித்தம், புத்தி, அகங்காரம்
(D) மனம், அகங்காரம், சித்தம், புத்தி

**36.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | நன்னூல் | (1) | ஐயனாரிதனார் |
| (b) | நேமிநாதம் | (2) | அமிர்தசாகரர் |
| (c) | யாப்பெருங்கலம் | (3) | குணவீரபண்டிதர் |
| (d) | புறப்பொருள் வெண்பாமாலை | (4) | பவணந்தி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

**37.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | ஓரறிவு உயிர் | (1) | முரள் |
| (b) | ஈரறிவு உயிர் | (2) | சிதல் |
| (c) | மூவறிவு உயிர் | (3) | தும்பி |
| (d) | நாலறிவு உயிர் | (4) | புல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 4 | 1 | 3 | 2 |

**38.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | பிரிநிலை | (1) | அத்தை |
| (b) | எதிர்மறை | (2) | ஏகாரம் |
| (c) | தெரிநிலை | (3) | உம்மை |
| (d) | முன்னிலை அசை | (4) | ஓகாரம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

**39.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | கோட்சொலல் | (1) | கடுஞ்சொல் |
| (b) | சொல்லத் தகாமையைப் புகலுதல் | (2) | பயனில் சொல் |
| (c) | வெட்டெனக் கழறல் | (3) | பொய் |
| (d) | பொருள் பயவாத பேசல் | (4) | குறளை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

**40.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | பரிமேலழகர் | (1) | தொல்காப்பியம் |
| (b) | பரிதியார் | (2) | பரிபாடல் |
| (c) | பதுமனார் | (3) | திருக்குறள் |
| (d) | கல்லாடனார் | (4) | நாலடியார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

**41.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | ஓரம்போகியார் | (1) | பாலை |
| (b) | அம்மூவனார் | (2) | முல்லை |
| (c) | ஓதலாந்தையார் | (3) | மருதம் |
| (d) | பேயனார் | (4) | நெய்தல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

**42.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | வெட்சி | (1) | பிள்ளையாட்டு |
| (b) | கரந்தை | (2) | குடைநிலை |
| (c) | வஞ்சி | (3) | குடைச் செலவு |
| (d) | காஞ்சி | (4) | விரிச்சி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

**43.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | நிலங்கடந்தவன் | (1) | நான்காம் வேற்றுமைத் தொகை |
| (b) | தலைவணங்கினவன் | (2) | ஐந்தாம் வேற்றுமைத் தொகை |
| (c) | சாத்தன் மகன் | (3) | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| (d) | ஊர்நீங்கினான் | (4) | மூன்றாம் வேற்றுமைத் தொகை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

**44.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | பெருமாள் திருமொழி | (1) | நம்மாழ்வார் |
| (b) | பெரிய திருமொழி | (2) | திருமழிசையாழ்வார் |
| (c) | பெரிய திருவந்தாதி | (3) | திருமங்கையாழ்வார் |
| (d) | திருச்சந்த விருத்தம் | (4) | குலசேகராழ்வார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

**45.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | சிற்பக்கலை | (1) | சித்தண்ணவாயில் |
| (b) | நாட்டியக்கலை | (2) | கங்கைகொண்ட சோழபுரம் |
| (c) | கட்டடக்கலை | (3) | சிதம்பரம் |
| (d) | ஓவியக்கலை | (4) | தாராசுரம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

**(46–50)** பின்வரும் கவிதையைப் படித்துத் தொடர்ந்து இடம் பெற்றுள்ள வினாக்களுக்கு ஏற்ற விடையை எழுதுக.

பழைமையின் பாதை கற்ற
பண்டிதர் நடைமுன் னோர்கள்
வழமைஈ தெல்லாம் எங்கள்
வசனமொத் ததுவே யென்று
கிழமை கொண்டாடி ஏதோ
கிறுக்கிவைப் பார்கள் இந்த
கிழவினைச் சகியா தேதும்
எம்மனோர் சொன்னால் வைவார்

குப்பையைக் கூட்டி வைத்துக்
கொண்டிதோர் கவிதை என்பார்
எப்படி யேனும் அஃதை
ஏற்றமாம் கவிதை யென்று
ஒப்பிட வேண்டும் என்பார்
உணர்ந்தவர் தவறென் றாலோ
எப்படிச் சொல்வீ ரென்று
இழிமொழி பலவும் சொல்வார்

உணர்ச்சியும் சொல்லும் கூடில்
உண்மையில் கவிதை யாமிப்
புணர்ச்சியில் லாத தெல்லாம்
புலவர்வாய்ச் சொல்லென் றாலும்
மணமிலா மலர்தா னென்போம்
மானிடர் மாண்டு போனால்
பிணமென வேநாம் சொல்வோம்
பிறர்சொல்லும் வசவுக் கஞ்சோம்

ஆவியே யில்லா மேனி
அதனையோர் மனித னென்று
கூவிடல் போலச் சொல்லைக்
கூட்டி வைத்திதுவும் ஓர்மா
காவியம் என்பார் அஃதைக்
கற்றவர் பிழையென் றாலோ
பாவிகள் தமிழைக் கொல்லப்
படைதிரண் டனரே என்பார்.

46. பாவிகள் தமிழைக் கொல்லப் படை திரண்டனரே; எப்போது?
(A) உணர்ந்தவர் தவறு என்னும் போது
(B) சகியாது சொல்லும் போது
(C) கற்றார் பிழை என்னும் போது
(D) காவியம் எனப் போற்றும் போது

47. எங்கள் வசனம்
(I) பழமையின் பாதை (II) பண்டிதர் நடை
(III) முன்னோர் வழமை (IV) ஏற்றமிக்க கவிதை
இவற்றுள்
(A) I, II ,III சரி (B) II, III ,IV சரி
(C) I, III, IV சரி (D) I, II, IV சரி

48. உறுதிக்கூற்று: (உ) உணர்ச்சியும் சொல்லும் கூடாதது புதுக்கவிதை.
காரணம்: (கா) புலவர் வாய்ச் சொல் எனினும் மணம் இல்லாத மலர் தான்
(A) (உ). (கா). இரண்டும் சரியல்ல
(B) (உ). (கா). இரண்டும் சரி
(C) (உ). சரி ; (கா). சரியன்று
(D) (உ). சரியன்று ; (கா). சரி

49. நிரல்படுத்துக.
(A) வைவார், ஒப்பிடவேண்டும் என்பார், இழிமொழி பலவும் சொல்வார், கவிதை என்பார்
(B) வைவார், இழிமொழி பலவும் சொல்வார், கவிதை என்பார், ஒப்பிடவேண்டும் என்பார்
(C) வைவார், ஒப்பிடவேண்டும் என்பார், கவிதை என்பார், இழிமொழி பலவும் சொல்வார்
(D) வைவார், கவிதை என்பார், ஒப்பிடவேண்டும் என்பார், இழிமொழி பலவும் சொல்வார்

50. பொருத்துக:
(a) சொல்லைக் கூட்டிவைத்தல் (1) வசனம்
(b) குப்பையைக் கூட்டிவைத்தல் (2) பிணம்
(c) மாண்டு போன மனிதர் (3) கவிதை
(d) கிறுக்கி வைத்தல் (4) காவியம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

**Space For Rough Work**